களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies

# கூற்றுநோக்கில் ஐங்குறுநூற்றுப் பாடல்களும் கருத்துப் புலப்பாட்டுத்திறனும்

*ஈ. சௌமியா, முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி பொள்ளாச்சி.*

*முனைவர். க. தனலட்சுமி, உதவிப்பேராசிரியர் (நெறியாளர்), தமிழ்த்துறை, நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி*

Explicitly describe the life of ancient peoples; Showing is literature. The word literature is called objective science. Literature can be said to be the composing and interpreting of literature in man. Five hundred is a book. Kurinji, Mullai Marutham, Neithal and Paalai are the five thinais, and each thinai has 500 songs with 100 songs each. The five hundred verses, though narrow in scope, are full of thoughts. In the narrative songs; This article examines only the poems of the leader.

**கூற்று:-**

கூற்று என்பது பேசுதல் என்று பொருள்படும். பொருள் பொதிந்த பேச்சுகளே கூற்றுகள். கருத்துப் பரிமாற்ற படிநிலை வளர்ச்சியின் முதிர்ந்தநிலையைக் கூற்று அல்லது உரையாடல் என்றுக் கூறலாம். தொல்காப்பியரால் செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூறப்படுவது 'கூற்று' .கூற்று மனிதவாழ்வில் மிகவும் இன்றியமையாததாகிறது. கூற்று நிகழ்த்தப்படவில்லையாயின் பல்வேறு சூழல்களில் மனிதர்களுக்குள் ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு கிடைக்காமலேயே போய்விடும். சங்க இலக்கியப் பாடல்களில் மாந்தர்களுக்கு இடையிலான பெரும்பான்மையானச் சிக்கல்களுக்குத் தீர்வு தருவதாய் கூற்றுநிலை அமைவதை அறியமுடிகிறது.

**கூற்றுவிளக்கம்:-**

'கூற்று' என்னும் சொல்லுக்குப் பொருளாக "காலன்,சொல், நமன்" 1 என்று தமிழ் மொழிஅகராதி பொருள் கூறுகின்றது. "கூற்று என்றும் சொல் பேச்சு,உரையாடல்,எடுத்துரைப்பு,மொழிதல் என்றும் பொருளைக் கொண்டாலும் கருத்துக்களை வெளிப்படுத்தும் முறை என்று பொருளைத் தருகின்றன" 2என்று தொல்காப்பியத்தில் கூற்றுக் கோட்பாடு என்னும் நூல் குறிப்பிடுகிறது. ஒருவர் கூறுவதை மற்றொருவர் கேட்குமிடத்து கூற்று நிகழ்கிறது. கூற்றில் இடம்,காலம் அறிந்து பேசுவது இன்றியமையாத ஒன்றாகும். அவ்வகையில் கூற்று நிகழும் பொழுதுதான் பயன்விளையும் என்று உணரமுடிகின்றது.

அகப்பொருள் இலக்கியங்களிலேயே கூற்று நிகழத்துவோரும் முதன்மையாகத் திகழ்பவர் தலைவனும்,தலைவியுமே.

**தலைவன் கூற்றுகள்:-**

ஐங்குநுறுநூற்றில் தலைவன் கூற்றாக 90 பாடல்கள் காணப்படுகின்றன. இக்கூற்றுகளும்,பாடல்களும்இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியிற்கூட்டம்,பரத்தையற்பிரிவு,பிரிவிடம்,இடைச்சுரத்தழுங்கல்,விளையிடம்,வினைமுற்றிமீளல் எனப்;பல்வேறு சூழ்நிலைகளிலும் நிகழும் தலைவன் கூற்றுகளை ஆய்வதாக இப்பாடல்களின் கருத்துகள் புலப்படுகின்றன.

**தலைவன் மாண்பு**

பழிபாவங்களைக் கண்டுஅஞ்சுதலும், அறிவுடையவாக இருத்தலும் ஆண்மகனுக்கு (தலைவன்) உரிய இயல்பாகும், என்பதை,

"பெருமையும் உரனும் ஆடுஉமேன"

(தொல்.1044)

என்று தொல்காப்பியம் காட்டும் நூற்பாவில்,தலைமகளது வேட்கைக் குறி;ப்பை உணர்த்த தலைமகன் புணர்ச்சியை நினையாது வரைந்து கொண்டதன் பிறகுஅடையும் என்பதும் அறியப்படுகிறது.

**தலைவன் இயல்பு:-**

இயற்கைப்புணர்ச்சிக்குப்பின்னர் தலைவன் இயல்பு மேலோங்குதலை தொல்காப்பியம் வழி அறியப்படுகிறது. அவை.

“முன்னிலையாக்;கச் சொல்வழிப்படுத்தல்
நன்னயம் உரைத்தல் நகைகனிஉறா அ
அந்நிலைஅறிதல் மெலிவுவிளக்குறுத்தல்
தன்னிலையுரைத்தல் தெளிவகப்படுத்தலென்று
இன்னவைநிகழும் என்மனார்புலவர்”

(தொல்;.1047)

முன்னிலையாகாத வண்டு, நெஞ்சு முதலியவற்றை முன்னிலையாக்கிக் கொள்ளுதலும்,அவை சொல்லாதவற்றைச் சொல்லுவது போலக் கூறுதலும்,தன்னிடம் பேசுவதாக எண்ணி அவற்றிற்குத் தன் உள்ள எண்ணங்களை எடுத்துக்கூறுதலும்,தலைவிமிகவும் மகிழ்ச்சி அடையும் தன்மையைஅறிதல், இப்பிரிவினால் தனக்குள்ள வருத்தத்தைக் குறிப்பாக உணர்ந்து அதைத்தீரக் கூறுதலும்,தலைவியோடு கொண்டதொடர்பு எப்பொழுது வருகின்றதென்று தன்னோடுநிலையை உரைத்தலும் தலைவியைவிட்டுப் பிரிந்து போகமாட்டேன்,பிரிந்து சென்றாலும் ஆற்றியிருத்தல் இயலாது. எனவே பிரிந்தால் அறமுடைய செயற்பொருட்டுப்பிரிவேன் என்று மனம் தெளிவாகும் படி கூறுதலும், இவ்வாறானதலைவனின் இயல்புகள ;தொல்காப்பியம் வழி எடுத்துரைக்கப்படுகிறது.

தலைவன்,தலைவிஆகியோர்தம் அன்பின் மிகுதியால் புணர்ந்தபுணர்ச்சியே இயற்கைப் புணர்ச்சி என்பதாகும். “இயற்கைப் புணர்ச்சியைக் ‘காமாக்கூட்டம்’ எனினும்,‘முன்னுறுபுணர்ச்சி’ எனினும்,‘முன்னுறபுணர்ச்சி’ எனினும் ஒக்கும்” 3 என்பர் இளம்பூரணர்.

களவுநிகழ்ச்ச pநான்கிலும் இயற்கைப் புணர்ச்சியே முதலாவதாகப் பேசப்படுகிறது.

இயற்கைப் புணர்ச்சியில் தலைமக்கள் நிலைபற்றித் “தலைவனதுஅறிவு,நிறை,ஓர்ப்பு,கடைப்படி என்ற நான்கு பண்புகளும்,தலைவியின் அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு என்ற நான்கு பண்புகளும்,‘புனல் ஒருவழிப் புறச்சாய்ந்தாற்போல வேட்கையின் மீதூரப்பட்டுச் சாய்ந்து கிடக்கும்” 4என்று இறையனார்களவியல் உரை தெளிவுப்படுத்துகிறது.

பிறப்பு,குடிமை,ஆண்மை,ஆண்டு,உருபுநிறுத்தகாமவாயில்,நிறை,அருள், உணர்வு,திரு முதலிய பத்துவகைப் பண்பால் ஒத்ததலைவனும்,தலைவியும் நல்லூல் வயத்தராய்த் தம்முள் தாமேஎதிர்ப்பட்டு ஒத்தகாதலராய்க் கூடுகின்ற கூட்டமே இயற்கைப் புணர்ச்சி” 5 பேராசிரியர் உரைவிளக்கம் அளிக்கின்றார்.

“களவுப் புணர்ச்சி, இயற்கைப் புணர்ச்சிஎனவும்,தெய்வப் புணர்ச்சிஎனவும்,காதலால் நிகழ்வதால் காமப்புணர்ச்சி எனவும்,முதன் முதலாகப் புணர்தலால் முன்னுறுபுணர்ச்சி எனவும் பெயர் பெறும்” 6என தேவநேயர் விளக்கம் அளிக்கின்றார்.

“தலைவனும்,தலைவியும் ஊழ்வலியால் ஒருவரைஒருவர் கண்டுகாதல் கொள்வது இயற்கைப் புணர்ச்சி எனப்படும். இதனை இலக்கண நூல்கள் “எதிர்ப்பாடு” என்று குறிப்பிடும். இந்த இயற்கைப் புணர்ச்சியைத் ‘தெய்வப்புணர்ச்சி என்றும்,முன்னுறுபுணர்ச்சி’ என்றும் இலக்கணஆசிரியர்கள் குறிப்பிடுவர். இருவரும் தெய்வத் தன்மையால் புணர்ந்தாலும்,முயற்சியும். உளப்பாடும் இன்றிப் புணர்ந்தாலும் ‘தெய்வப்புணர்ச்சி” என்று கூறப்பட்டது எனலாம். இவள் நலம் இவனால் முன்னுற எய்தப் பெற்றமையாலும்,‘முன்னுறுபுணர்ச்சி’ என்று குறியீடு செயல்பட்டது” 7என்று ந.சுப்புரெட்டியார் இயற்கைப்புணர்ச்சி பற்றிவிளக்கிஉரைக்கின்றார்.

**புனலாடுதல்:-**

தலைவன் ஊடல் மிகுந்ததலைவியைக் கூடுவதற்குப் பிறபிறபெண்களைக்கொண் டுஊடல் உணர்த்துமிடத்து அவனிடம் கூற்றுநிகழும். இக்கூற்று ‘பிறபிறபெண்டிற் பெயர்த்தற்கண்ணும்’ எனப்படும். முதல் இரண்டு கூற்றுகளின் விரிவே அடுத்த இரண்டு கூற்றுகள்,‘இந்தநான்கு கூற்றுகளுள் முதல் இரண்டுஅகத்திணையியலிலும், பின் இரண்டுக் கற்பியலிலும் அகத்திணையிலில் சுருக்கமாகக் கூறிய கூற்றுகளையே கற்பியலில் விரிவாகவிளக்கிக் கூறுகின்றார் என்பதுபுலனாகிறது. அவ்வாறுவிரிவாக கூறுவதற்குக்காரணம் என்னவென்றால் தாம் கண்டபாடல்களில் தலைவ pதலையணைகளைத் தழுவிக் கிடந்தநிலையில் தலைவன் அவளதுஅடிகளைப் பற்றி இருந்தது. பிறபிறபெண்டிர் காட்டில் ஊடலைத் தணிப்பதுஆகிய பொருண்மைகள் கண்டுஅவற்றைக் கூற்றிலும் ஏற்றியதே காரணமெனலாம்.

தலைவியோடுசென்றுபுதுப்புனலாடி இன்புறுவதற்கு விரும்பியதலைவன்,தன்னோடு ஊடியிருந்ததiவியின் ஊடலைத் தீர்ப்பதற்காகஅத்தலைவிகேட்க தோழியிடம் நீ களவுக் காலத்தில் தலைவியைக் குறித்த இடத்தில் சேர்த்துவிட்டுச் சென்றபொழுது நானும்,தலைவியும் சென்று நீராடினோம் என்று களவில் நிகழ்ந்தநிகழ்ச்சியைக் கூறுகின்றான். இதனை,

“வாய்மலர் ஆம்பல் கயிலஅமைநுடங்குதழைத்

திதலைஅல்குல்,துயல்வரும் கூந்தல்,

குவளைஉண்கண்,ஏஎர் மெல்லியல்

மலர் ஆர் மலர்நிறைவந்தெனப்

புனலாடுபுணர்துணைஆயினன்,எமக்கே”

(ஐங். மரு.72)

என்று ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் விளக்குகின்றன. இக்கருத்து தன்னோடு ஊடியிருக்கும் தலைவி தான் கூறுவதைக் கேட்டுநெஞ்சுநெகிழ்ந்து ஊடல் தீரவேண்டும் என்னும் கருத்துடையவனாய் தலைவிகேட்கஅவள்

நலத்தைப்பாராட்டுகின்றான்.

காதலனுடையபாராட்டுரைகேட்டஅளவிலேதலைவியின் உள்ளம் மிக மனமகிழ்ந்த நெகிழ்வு இதனை,

“பண்மாயக் கள்வன் பணிமொழியான்றோ நம்

பெண்மையுடைக்கும் படை” 8

எனவரும் திருக்குறளின் வழி அறியலாம்.

“வல்லவர் ஊடல் உணர்த்தரநல்லாய்

களிப்பர் குளிப்பர் காமம் கொடிவிட

அளிப்ப துனிப்ப ஆங்காங் காடுப” 9

என பரிபாடலும் ஒப்புநோக்கத்தக்கது.

மேலும்,

தலைவன்,தலைவி என்னோடு நீராடிய பெரியதுறை முழுவதும் தேனைஉடைய குவளைமலர்களின் மணம் கமழ்ந்து மற்றும் மிக்ககுளிர்ச்சி நிறைந்ததாகவும் இருந்தது என்றுதோழிக்கு உரைக்கின்றான். இதனை,

“வண்ணஒன்தழைநுடங்க, வால் இழை,

ஒண்ணுதல் அரிவைபண்ணைபாய்ந்தெனக்

கள்நறுங்குவளைநாறித்

தண்ணென்று இசினேபெருந்துறைப் புனலே”

(ஐங்.மரு.73)

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**தன் நெஞ்சிற்குசொல்லியது**

தலைவி பிரிந்த வழி அவ் ஆற்றால் மிகுதியால் தலைவன் கலக்கம் உறுவதாகத் தன் நெஞ்சிற்குரைப்பதாகஅமைகிறது.

தலைவன், தலைவியை ஒரு பூம்பொழிலில் கண்டு,தோழிகளை நீங்கிதனித்து நின்ற தலைவியைத் தலைப்பட்டுஅவள் குறிப்புஅறிந்து இயற்கைப் புணர்;ச்சி புணர்ந்தவன் மீண்டும் தோழிகளொடு கூடிச் செல்லும் அவளைத் தலைவன் மறைந்துநின்று அவள் மின்னென ஒளிக்கும் அழகினைக் கண்டுகளிப்பவன் அவள் அருமையைத் தன்னுள் நினைத்துபெறற்கரும் பேறுபெற்றேன் என்று மகிழ்ந்தும்,பின்னர் அவளை மீண்டும் கூடுதல் இயலுமோ? என்று ஐயுற்றும் கலங்கக்;p கூறுவதாக அமைந்தபாடல்.

“திரை இமிழ் இன்இசை அளைஇ,அயலது

முழுவு இமிழ் இன்இசைமறுகுதொறும் இசைக்கும்

தொண்டிஅன்னைபணைத்தோள்,

ஒன்தொடி,அரிவைஎன் நெஞ்சுகொண் டோளே!

(ஐங்.நெய்)

என்று ஐங்குநூற்று நெய்தல் பாடலில் தெளிவுறுவதைக் காணலாம்.

இதனை வள்ளுவரும்,

“வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழைசாதல்

அதற்கன்னள் நீங்கு மிடத்து” 10

என்ற திருக்குறளும் குறிப்பிடுகின்றது.

மேலும்,தலைவன்,

“அணங்குடைப் பனித்துறைத் தொண்டிஅன்ன

மணம்கமழ் பொழில்குறிநல்கினள் நுணங்கு இழை

பொங்குஅரிபரந்தஉண்கண்,

அம்கலிழ் மேனி அசை இய எமக்கே”

(ஐங்.நெய்.174)

துலைவி காரணமாக வருத்தம் உற்ற எமக்குக் குளிர்ச்சிபொருந்திய துறைகளைக் கொண்ட தொட்டியைப் போன்ற மணம் கமழுமிடத்தில் குறி இடம் நல்குகிறாள்.அவள்நுட்பமான வேலைப்பாடமைந்த அணிகளையும், செவ்வேரி படர்ந்த கண்களையும்,மெலிந்தமேனியையும் உடையவள் என்று தன் நெஞ்சிற்குச் (தனக்குள்ளே) சொல்லியது.

**வரைவிடைவைத்துப் பிரிந்த தலைவன் கூறுவது**

திருமணம் செய்வதாகக் கூறப்pபிரிந்த தலைவன்,தான் இருக்கும் தனித்துறையைஆற்றானாய் சொல்லியது,

“வளைபடுமுத்தம் பரதவர் பகரும்
கடல்கெழுகொண்கண் காதல் மடமகள்
கெடல் அருந்துயரம் நல்கி,
படல் இன் பாயல் நல்கியோளே”

(ஐங்.நெய்.195)

என்னும் பாடலில்,

சங்குகள் ஈன்ற முத்துகளை விற்கின்ற கொண்கனின் அன்புமகள்,காதல் அறியாதகுணம் கொண்டவள். தலைவிபோக்கமுடியாத துன்பத்தை எனக்குத் தந்திருக்கிறாள். அவள் என் உறக்கத்தைக்கவர்ந்துகொண்டாள் என்று அவளை நினைத்து உறங்காமல் தவிக்கின்றான் தலைவன். தலைவியின் பெற்றோர் திருமணத்திற்குச்சம்மதம் கொடுத்தால் தலைவன் மணம் செய்யலாம் என்பதை அறியமுடிகிறது.

தலைவன் வரைவிடைப் பிரிந்து சென்றுபெரும் பொருள் கொணர்ந்து,தலைவி தமரிடம் தந்து,அவளை மணப்பான். சீவகசிந்தாமணி இப்பொருளை. ‘பரியம்’

என்று கூறுகின்றது. இக்காலத்திலும் உலகியலில் இப்பொருளை ‘பரிசம்’ என்று கூறக் காணலாம். பேராசிரியர் மு.இராகவையங்கார் தலைவியை மணம் பேசி அவள் சுற்றத்தாரைத் தலைவன் வேண்ட,அவர் மிகுந்த பரிசம் கேட்குமிடத்து அப்பரிசத்தின் பொருட்டு அவன் வரைவிடைவைத்துப் பொருள்வாயிற் புரிவான் எனக்கூறுகின்றார். அகப் பாடல்களில் இக்கூற்றுக்குச் சான்றுகள் இல்லாக்காரணத்தால் அவர் கருத்துஏற்புடையதன்று. “பரிசத்தின் (வரதட்சணை) பொருட்டுப் பொருளைச் சேர்த்தல் பிற்கால வழக்கேயன்றிச் சங்ககால வழக்கன்று” 11 என்பதை அறியமுடிகிறது.

**இடந்தலைப்பாடு**

“மெய்தொட்டுப்பயிறல் பொய் பாராட்டல்” 12

எனத் தொடங்கும் நூற்பாவில் களவில் தலைவனுக்குக் கூற்றுநிகழும் இடங்களைத் தொல்காப்பியர் பட்டியலிடுகிறார். இந்த நூற்பாவின் வழி இடந்தலைப்பாடு,பாங்கற்கூட்டம்,தோழிமதியுடம்பாடு முதலிய செய்திகளைப் பெறமுடிகின்றன. இடந்தலைப்பாட்டில் எட்டு இடங்களில்13தலைவன் மட்டும் கூற்றுநிகழும் என்பது தொல்காப்பியர் வகுத்திருக்கும் விதி எனலாம்.

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியுடன் இன்புற்றது போலவே இடந்தலைப் பாட்டின் கண்ணும் அவளைப் பெற்றுமகிழ விரும்பிய தலைவன் தன் நெஞ்சிற்கு உரைக்கின்றான்.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர் தலைவி தானே குறியிடம் கூறிஅவ்விடத்தேவரும் தலைவன் வரவினை எதிர்பார்த்து நின்றாள். துலைவி விளையாடுவாளாயினும் அவள் அடிக்கடி தன்வருகையை நோக்குகின்றாள் என்பதைக் கண்டான் தலைவன். தன்னை தூரத்தில் கண்டதும் நாணித் தலைகுனிந்து நின்றாள். அங்ஙனம் நிற்கும் பொழுது முகத்தை மறைக்கும் கூந்தலையுடையவளாய் தலைகுனிந்து நின்றவள் தனிமைகொள்ளும் மாலைப் பொழுது மறைந்தவுடன்,நன்மைப் பொருந்தியதன் மார்பினை எனக்கு நல்குவாள் என்கிறான். இதை,

“இலங்குவளைதெளிர்ப்பஅலவன் ஆட்டி,

முகம்புதைகதுப்பினள், இறைஞ்சிநின்றோளே

புலம்புகொள் மாலைமறைய,

நலங்கோழ் ஆகம் நல் குவள் எனக்கே”

(ஐங்.நெய்.197)

என்று ஐங்குறுநூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. இப்பாடலில் தலைவியைத் தனியிடத்தே கண்டு நுகரப்புகும் தலைவனுடைய மனநிலை மிகஅழகாகக் கூறப்பட்டுள்ளது.

“முன்னம் முகம்போல முன்னுரைப்பதில்” 14

ஏன நான்மணிக்கடிகை கூந்தல் நெகிழ்ந்து முகம்புதையச் சரிந்துகிடந்தலைச் சுட்டுகின்றது. மேலும் தலைவிநாணம் கொண்டதை,

“நாணடச் சாய்ந்தநலங்கிளர் எருத்தின்” 15

என்று பொருநராற்றுபபடை கூறுகின்றது.

**பாங்கற்குஉரைத்தல்**

தலைவியைப் பிரிந்ததலைவனுடைய மெலிவு கண்டு பாங்கன் உனக்கு இந்நிலை எதனால் ஆயிற்று? என்று வினவஅதற்கு, தலைவன் ‘ஒள்ளியவளையல் அணிந்த நங்கை ஒருத்த pஎன்னுடைய நெஞ்சத்தைக் கவர்ந்து கொண்டுவிட்டாள். பல்லுயிரும் உறங்குதற் குரியநள்ளிரவில் கண் துயலாமல் கிடக்க,தன் நெஞ்சம் அவளைப் பற்றி இடையுறாது நினைக்கின்றது’ என்கிறான்.

“ஒன்தொடிஅரிவைகொண்டனள்,நெஞ்சே!

வண்டு இமிர் பனித்துறைத் தொண்டிஆங்கண்

உரவிக் கடலொலித் திரைபோல,

இரவினாலும் துயில் அறியேனே!

(ஐய்.நெய்.172)

என்றபாடலில் தலைவன் உரைக்கின்றான். இக்கருத்தினால் தலைவன் தலைவியைப் பிரிந்துதுன்புறுவதைக் காணமுடிகிறது. சீதையின் பிரிவால் இராமர் இரவில் தூக்கம் இன்றித் துயரால் நலிவதை,

“தேற்றுவாய் நீஉளையாகத் தேறிநின்று

ஆற்றுவேன் நான் உளனாகஆய்விளை

தோற்றுவாள் அல்லள் இத்துன்பம் ஆர்தனிமாற்றுவார்” 16

எனவரும் கம்பராமாயணம் செய்யுள் மேற்கூறிய கருத்துஒப்பிடப்படுகிறது.

**மனையறமாண்புகள்,விருந்தோம்பல்**

சங்ககாலமக்களின் வாழ்க்கை மகிழ்ச்சியாக இருந்ததோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்குப் பயன்படுமாறுஅமைந்திருந்தது. திருவள்ளுவர்,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது” 17

என்றுகுறிப்பிடுகின்றார்.

எளிமையானதும்,சிக்கலற்றதும் அதேநேரத்தில் அன்புடையதுமானஅந்த இல்வாழ்க்கைக்குக் கடவுளின் பாதுகாப்புஏதும் இல்லாது இருப்பதுவியப்பாக இருக்கிறது. உயிர்களின் பசியைப் போக்கிப் பேருதவிசெய்கின்ற ஒருபண்பு சங்ககாலமக்களின் உயர் பண்பாக இருந்ததுஎனலாம்.

சமுதாயத்தின் நன்மைக்காக மனிதன் நடத்தவேண்டிய தொண்டு வாழ்ந்ததாகச் சங்ககாலத்தில் கருதப்பட்டது. அன்பும்,உழைப்பும்,அடித்தளமாகக் கொண்டு விருந்தோம்பல் கடமையாகக் கொண்டு செயல்பட்டனர். “விருந்தோம்பல்” என்பது, இல்லம் தேடிப் புதிதாகவருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று, இனிய மொழிகள் பேசிஉபசரித்துப் போற்றும் பண்பாகும். கணவன் மனைவியோடு மனையறம் செய்தல் வேண்டும்.

சங்ககாலத்தில்,விருந்துகணவன்-மனைவியரிடையே ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒன்றாக விளங்கியது. சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்புசிறப்பாகப் பதிவுசெய்யப்பட்டிருந்ததை.திலகவதி,

- “வந்தார்அனைவர்க்கும் வரவேற்பு நல்கும் வளமனை என்றும் உலகமே புகுந்தாலும் பலரோடு சேர்ந்து விருந்துண்ணத் தக்கவாயில் என்றும் விருந்தோம்பும் செல்வமனைகள் பற்றிச் சங்க இலக்கியங்கள் குறிக்கின்றன. சங்ககாலமகளிர் நள்ளிரவில் விருந்தினர் வரினும் முகம் சுளியாதுஅவர்களை எதிர்கொண்டுவரவேற்றுவிருந்துசெய்வர் என்பதை நற்றிணை குறிப்பிடுகின்றது. இராக் காலத்தில் கதவை அடைப்போர் விருந்தினர்களைப் புகவிட்டுப்பின்னும் யாரேனும் வருவீர் உளீரோ என்று வினவி ஒருவரும் இலராதலைஅறிந்தபின்னரே வாயிற் கதவைஅடைப்பர். இவ்வாறுவினவிக் கதவைஅடைப்பது சங்ககாலவழக்கம் என்று குறுந்தொகைப் பாடலால் அறியமுடிகிறது. மணங்கமலும் தாளிப்பையுடையஅடிசிலை விருந்தினருக்கு மிகுதி குறைபடாமல் வழங்கும் மகளிரை ‘வருநர்க்குவரையாவகையில் வாழ்க்கைமகளிர்’ எனப் புறநானூறு சிறப்பிக்கிறது. மகளிர்க்குரிய விருந்தோம்பலை இல்வாழ்க்கைத் தொழில் என்றும் பொருளில் ‘மனை முதல் வினையொடும் உவப்ப’ எனஅகநானூறு (அக.51) போற்றுகிறது. பிரிந்துசென்றதலைவர் மனைக்குத் திரும்பிவருங்கால் தலைவிவிருந்தயரும் மரபுண்மையைச் சங்கப் பாடல்கள் உரைக்கின்றன. பிரிந்து சென்றதலைவன் வருகையை முன்னரே தூதாக வந்துரைக்கும் பாணனும் தலைவனுடன் தேரை ஓட்டி வருகின்றபாகனும் விருந்து பெறுவர்” 1 8என்று விருந்தோம்பலின் சிறப்பைக்குறிப்பிடுகிறார். விருந்தோம்பல் முறையில் பெண்ணுக்குச்சிறப்பிடம் உண்டு.

நெய்தல் நிலத்துத் தலைவிவிருந்தினரைப் புன்னகையுடன் வரவேற்று உபசரித்தாள். விருந்துவாயிலாகப் புகுந்ததலைமகன் தலைவியது இல்வாழ்க்கைமற்றும் விருந்தோம்பல் சிறப்பைக் கண்டு,மகிழ்ந்து.

“இருங்கழ்ச் சேயிறாவினப்புள் ளாரும்

கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை

வைகறைமலரும் நெய்தல் போலத்

தகைபெரி துடைய காதலிகண்ணே”

(ஐங்.நெய்.188)

என்று கூறும் அவன் விருந்தினரைக் கண்டவுடன் தலைவியின் முகம் நெய்தல் மலரினைப் போன்றுமலர்ச்சிகொண்டது என்று தலைவியின் அழகைப் பாராட்டுகின்றான். தான் விருந்துவாயிலாகப் புகத் தன்னைச் சேய்மைக்கட் கண்ட அப்பொழுது முகம் மலர்ந்து இனிதுநோக்கினாள் என்று மகிழ்ச்சி கொண்டான் என்றுஅம்மூவனார் தலைவன் வாயிலாக விருந்தின் சிறப்பைப் பதிவுசெய்கிறார்

**தொகுப்புரை**

- கூற்று என்பதன் பொருள் அதன் வகைகள் பற்றியும் அதற்கு அறிஞர்கள் தரும் விளக்கத்துடன் கூறப்பட்டுள்ளன
- கூறுபவரிடமிருந்து கேட்பவருக்கு ஒருசெய்தியைக் கொண்டு செல்லும் முறையே கூற்றுமுறை என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- ஐங்குநுறூற்றில் பல்வேறு சூழ்நிலைகளில் நிகழும் தலைவன் கூற்றுப் பாடல்கள் ஆராயப்பட்டன.தலைவன் கூற்றாகத் தொண்ணூறு பாடல்கள் ;புனையப்பட்டுள்ளன.
- களவில் தலைவன் மற்றும் புனல் ஆடுதல் ஐங்குறுநூற்றில் மருதத்திணையில் புனல் ஆடுதல் நிகழ்வு கூறப்பட்டுள்ளன

- ;“வரைவோடுவருவென்” எனவும் “வரைவிடைவைத்துப் பிரிந்ததலைவன் ” செயல்கள் காணமுடிகிறது.

- வினையின் பயனாகவோ,போர்பயனாகவோ தலைவியைப்பிரியும் போது அவன் அல்லல் குறிபடுதலாலும்,குறியின் காத்துநிற்கும் போது பொழுது,அவன் நெஞ்சம் புலம்புவதைக் காணமுடிகிறது.

- தலைவனின் கூற்றுப் பாடல்களில் அன்பில் பிரிவு மேலோங்கி இருத்தலைஅறியமுடிகிறது.

- காதலைக் காட்டிலும் வீரம் தான் உயர்ந்ததுஎன்பதையும் “வினையேஆடவர்க்குஉயிரே” என்பது தெளிவாகஆராயப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. தமிழ்மொழிஅகராதி, ப.107
2. ஈஸ்வரி, இரா.,தொல்காப்பியத்தில் கூற்றுகோட்பாடு, ப.2
3. இளம்.உரை. தொல்.பொருள், கள. நூ.10
4. நக்கீரர் உரை. உறை,அகப் ப.33
5. பேர. உரை. தொல்.பொருள்.மெய். நூ. 25
6. ச.தண்டபாணிதேசிகன்(உ.ஆ) தேவநேயர்திருக்குறள் உரைக்களஞ்சியம் காமத்துப்பால், ப.77
7. ந.சுப்புரெட்டியார்,அகத்திணைக் கொள்கைகள், ப.48
8. குறள்,நிறையழிதல், கு.எ.8
9. பரிபா, பா.எண்.6; வரி.102-104
10. குறள்.,காதற் சிறப்புரைத்தல், கு.எ.4
11. மு.இராகவையங்கார்,தொல்காப்பியம் பொருளதிகாரஆராய்ச்சி, ப.70.
12. தொல்.பொருள் நூ.எண்.102:1, நச்-,

13. மேலது.,கிட்கிந்தாகாண்டம், பா.எ.535. நூ.எண்.102: 1-5, நச்,
14. நான்மணி, பா.எ.48,வ.4
15. பொருநர், பா.அ.31
16. கம்ப
17. குறள்.,பொழுதுகண்டிரங்கல், கு.எ.7
18. க.திலகவதி,சங்ககாலமகளிர் வாழ்வியல், பக்.14